இருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்கிருர்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு முதலைப் பண்ணை ஆரம்பிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சிதம்பரத்திற்கு அருகில் வக்கிரமாரி ஏரியில் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதையும் எடுக்கலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நான் முதலைகள், பண முதலைகள் என்று இரண்டு வகைதான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி: இந்த முதலைப் பண்ணை காவிரி ஆற்றில் கிளிக்கூடு பக்கத்தில் இருக்கிற இது இயற்கையாக அமைந்த ஒன்று. அங்கு பல முதலைகள் இருக்கின்றன. அந்த முதலைகளுக்கு ஒரு பாதுகாப்பு இல்லாததால் சிலநேரங்களில் தப்பி வந்து ஆடுமாடுகளை எல்லாம் அடித்து இழுத்துக் கொண்டு போய் விடுகின்றன. ஆகவே அதற்கு வேலி அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அதற்கும் ஆகாரம் போடும் உத்தேசமும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்தக் குட்டையில் 12 பெரிய முதலைகளும் 100 குட்டிகளும் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. வேலி அமைக்கும் முறையெல்லாம் இப்போது எடுக்கிற முயற்சியில் இருக்கிறது. உணவு அளிக்கிற வகையில்-மீன்களும் சிலசமயங்களில் இறைச்சியும் இப்போது அளிக்கப் படுகிறது.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சங்கரன்கோயில் சாலை மராமத்து

*267—வினு திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியில், சங்கரன்கோயில் செல்லும் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்ட யூனியன் ரோட்டை செப்பனிட டெண்டர் விடப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) ரூ. 33,500 மதிப்பீட்டில் இந்த வேலை நடைபெற்று வருகிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்த ரோட்டின் நீளம் எவ்வளவு? இவ்வளவு காலம் வேலை முடிவடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க அரசு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த ரோட்டின் நீளம் 3.6 கிலோமீட்டர்ஸ். இந்த வேலை ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்தால் டெண்டர் விடப்பட்டு வேலை நடைபெற்று வருவதாகவும் சீக்கிரத்தில் முடிந்து விடும் என்றும் தகவல் வந்திருக்கிறது.

ஒன்றியங்களுக்குத் தேவைப்படும் குழாய்கள்

*268 **வினா—திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலமாக ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்குத் தேவைப்படும் ஜி.ஐ. பைப்புகள் ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்கவேண்டுமென்று 30—10—1974-ல் உத்தரவு போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்ட கீழத் தஞ்சை டிவிஷனல் என்ஜினியர் 31—7—74-ம் தேதி அன்று நாகப்பா கார்ப்பரேஷன் என்ற கம்பெனியின் டெண்டரை அப்ரூவ் செய்திருக்கிறார்கள். பிறகு அதே கம்பெனிக்கு 3—10—1974-ம் தேதி மேலும் இரண்டு மாதங்களுக்கு அந்த டெண்டரை நீட்டித்து